**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.2/2019 தேதி-03.02.2025
(D.W.2) – ஜெகஜின் ராஜ்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10-ஆம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் மற்றும் ஆங்கில் எழுத, படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிக்கத் தெரியும், ஆங்கிலம் கொஞ்சம் தெரியும். ஆங்கிலத்தில் பிழையுடன் எழுத தெரியும். எனக்கு 2 சகோதரர்கள் என்றால் சரிதான். 1999-ஆம் ஆண்டு ராணுவத்தில் நான் பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். 2-ஆம் பிரதிவாதி பேபி ஸ்டேல்லா அவர்களுக்கு நான் பணியில் சேருவதற்கு முன்பே திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் நான் மட்டும்தான் அரசு பணியாற்றி வருகிறேன் என்றாலும் மற்றவர்கள் சிறு வயது முதலே கூலி வேலை செய்துவருகின்றனர் என்றால் சரிதான். 2-ஆம் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றபோது என் அப்பா உயிருடன்தான் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா நோய்வாய்ப்படுவதற்கு முன்பு என்ன வேலை செய்துவந்தார் என்றால் கூலி வேலை செய்துவந்தார். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள ஓட்டுவீட்டின் முன் பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன வீட்டைத் தவிர்த்து மற்ற இடங்கள் காலியாகவும் சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஓட்டு வீட்டை தொட்டு நான் தற்போது வீடு வைத்துள்ளேன். 5-ஆம் பிரதிவாதி வீட்டில்தான் என் அம்மா வசித்து வந்தார் என்றால் சரிதான். தற்போது என் அம்மா எங்கு வசித்து வருகிறார் என்றா் வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள ஓட்டு வீட்டில் வசித்துவருகிறார். நான் என் எதிர் வழக்குரையிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் என்னுடைய தங்கைக்கு திருமணம் செய்துவைத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் எதிர் வழக்குரையை தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன பிரதிவாதிகள் தங்களின் எதிருரையில் வாதிக்கு பாகம் வழங்குவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்சொன்வாறு வாதிக்கு பாகம் வழங்குவதற்கு மற்ற பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிந்து வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(D.W.2) – ஜெகஜின் ராஜ்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

3. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கில் சொல்லப்படாத சங்கதிகளை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர் உரையில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணம் 2021-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-5 ஆவணத்தில் என்னுடைய வீட்டின் கதவு எண் 63/1 என்று 2017-ஆம் ஆண்டிற்கான ஆவணமான குடிநீர் ரசீதில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்தபிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள மின் இணைப்பு தற்போதும் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ-10 ஆவணங்கள் 2025-ஆம் ஆண்டில் பெறப்பட்டது என்றால் சரிதான். 03.01.2019 அன்று வாதி இவ்வழக்னை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

4. பதிவு செய்யப்படாத சம்மத பத்திரமான பி.வா.சா.ஆ-2 ஆவணம் 22.01.2019 அன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.3 ஆவணமான விடுதலை பத்திரமானது 10.01.2020 அன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ஆவணத்தை குறித்து நான் என்னுடைய எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2019-ஆம் வருடத்திற்கு முன்பு என் பெயரில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ-10 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்சொன்ன ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் கட்டியதாக சொல்லப்படும் வீட்டிற்கான பத்மனாபபுரம் நகராட்சியிடம் பெறப்பட்ட வரைபடம் மற்றும் ஒப்புதல் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதியான பாலம்மாள் ஜீவனாம்சம் கேட்டு என் உயரதிகாரிக்கு மனு அனுப்பியதற்கு நான் எழுத்துபூர்வமாக பதில் அளித்தேன் என்றால் சரிதான், 1-ஆம் பிரதிவாதியின் பேரில் வாதி அனுப்பிய மனுவாகும். மேற்சொன்ன மனு சம்மந்தமாக என் உயரதிகாரி என்னிடம் விசாரணை செய்தார் என்றாலும் அதற்காக நான் கொடுத்த பதிலின்பேரில் அந்த விசாரணை முடிக்கப்பட்டது என்றாலும் அதற்கான ஆவணம்தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

5. மேற்சொன்ன பதில் ஆவணம் மற்றும் உயரதிகாரியின் விசாரணை அறிக்கை வா.சா.ஆ-4 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.( 4-ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் வா.சா.ஆ-4 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). என்னுடைய பதிலின் அடிப்படையில் விசாரணை அதிகாரி என்னுடைய அம்மா வயதானவர் என்றும் சுயநினைவு இல்லாதவர் என்றும் குறிப்பிட்டு சொத்து பிரச்சணை சம்மந்தமாக என்னுடைய மூத்த சகோதரர்தான் புகார் அளித்துள்ளார் என்று புகாரை முடித்துவைத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ஆவணம் வழக்கு நிலுவையில் உள்ளபோது ஏற்படுத்தப்பட்டதால் அந்த ஆவணம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 ஆவணம் 1-ஆம் பிரதிவாதியின் விருப்பமில்லாமல் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ-2 ஆவணத்தில் சொத்து சம்மந்மான எல்கை ஏதும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வரைபடம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2 , 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்தின் கூட்டு அவகாசத்தில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்து கட்டிடமும் என்னுடைய அப்பா பாலய்யன் விலைக்கு வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் உள்ளிட்ட வழக்கு தரப்பினர்கள் ஏழு பேரும் கூட்டாக சொத்தை பெற்று கட்டிடத்தையும் கைவசம் வைத்து அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-5 ஆவணத்தினல் பாகம் பெற்றதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பி.வா.சா.ஆ-5 ஆவணத்தில் 5 செண்ட் சொத்தில் எனக்கு விடுதலையாக கொடுக்கப்பட்ட சொத்தை தவிர்த்து மீதச்சொத்துக்களை எல்கைகளாக காட்டவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் 1-வது சாட்சியாக கையொப்பம் செய்தவர் என் மனைவி என்றால் சரிதான். மேற்சொன்ன பி.வா.சா.ஆ-2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ஆவணங்கள் ஏற்படுத்தப்படும்போது வழக்கு நிலுவையில் உள்ள விவரம்

(D.W.2) – ஜெகஜின் ராஜ்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு தெரியும் என்றால் சரிதான். உரிய தரப்பினர்களை கட்சியாக சேர்க்காமல் ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ-3 அவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகரம் சட்டப்படி கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கிற்கு தொடர்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் எதிர் உரையில் கையொப்பம் செய்யாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என் மனைவி கையொப்பம் செய்து எதிர் உரையை தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் இதுநாள் வரை எந்த அதிகாரமும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. என் கைவசம் இருந்த பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ஆவணங்களை வழக்கை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு செலவுதொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**1,2,3,5** மற்று **6** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு பட்டிகை சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாகம் கேட்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் நீதிமன்ற கட்டணம் செலுத்த தயாராக உள்ளார்கள். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ஆவணங்கள் வழக்கு தொடரப்பட்ட பிறகு வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.